[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்] [2018 ஜூலை 5

கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, தீபாவளிக்கு போனஸ் வழங்கியதைப்போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தில் அது இருக்கிறது. சூழ்நிலைகள் சரியாக வருகின்றபொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தை ஈர்த்ததுபோல, தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணிக்கொடை மற்றும் மருத்துவ விடுப்பு, அவர்கள் சொன்ன கணக்கு விவரங்கள் எல்லாம் ஏற்கெனவே எங்களுடைய குறிப்புகளிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய சகோதரி திருமதி கஸ்தூரி வாசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தனியார் தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலியைவிட, அதாவது 301 ரூபாய்க்கும் மேலாக TANTEA–ல் கொடுக்கப்படுகிறது. எனவே, இதுபோன்ற நடவடிக்கைகள் மூலமாக, இந்த ஆட்சியில் விரைவிலே TANTEA புத்துணர்வைப் பெற்று இலாபத்தில் இயங்குகிற சூழ்நிலையை மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் மேற்கொள்ளவிருக்கிறார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியை அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

7. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016–2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு இவ்வாண்டு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள 5 துறைகளுக்கான 5 அறிக்கைகள், எண் 4 முதல் 8 வரையிலான அறிக்கைகளை அச்சிடப்படாத அறிக்கைகளாக குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.